(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No. 01/2015 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tr.Selvaraj** |
| Father's/Husband's Name | : | Thoppai Asari |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th December 2023.**

(எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் இறுதியாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பறக்கும் படையில் தனி வட்டாட்சியர் ஆக பணிபுரிந்து

மார்ச் 2014–ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.06.2012–ம் தேதி காரைக்குடி வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தபோது சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் இருந்து 08.08.2012 அன்று கடிதம் ஒன்று எனக்கு அனுப்பப்பட்டது.

2.மேற்படி கடிதத்தில் அண்டகுடி கிராமத்தை சேர்ந்த தற்போது கோட்டையுர் ஸ்ரீராம் நகரில் வசித்து வரும் சண்முக சுந்தரம் த/பெ.குப்புசாமி, அவரது மனைவி திருமதி.பாக்கியலட்சுமி, மகன்கள் பார்த்திபன், பகீரதன் மற்றும் அகிலாண்டேஸ்வரி ஆகியோர் பெயரிலுள்ள மித்ராவயல் மற்றும் செங்காத்தங்குடி கிராமங்களிலுள்ள நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களின் விபரங்கள் கோரப்பட்டிருந்தது.

3. அதன் அடிப்படையில் மித்ராவயல் கிராம நிர்வாக அலுவலர் தமிழ்ச்செல்வி மற்றும் செங்காத்தங்குடி கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரிடமிருந்து சண்முகசுந்தரம் மற்றும் அவரது மனைவி, மகள் மற்றும் மகன்கள் பெயரிலுள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களின் விபரங்களை தயாரித்து பெற்று வழங்கிட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.பாஸ்கரன் மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.மாதவன் ஆகியோருக்கு அறிவுரை கூறியிருந்தேன். அவர்களும் நான் சொன்னதுபோல் விபரங்கள்

அடங்கிய ஆவணங்களை பெற்றுக்கொடுத்தார்கள்.

4. அந்த ஆவணங்களில் மித்ராவயல் கிராமத்தில் பட்டா எண்.296, 320, 1030, 1047 மற்றும் 1052 ஆகிய பட்டா எண்களுக்கு 10(1) அடங்கிய அடங்கள் விபரங்கள் இருந்தது. அதனுடன் செங்காத்தங்குடி கிராம பட்டா எண். 727, 1468, 1490 மற்றும் 1551 ஆகிய பட்டா எண்களுக்கு 10(1) அடங்கிய விபரங்கள் இருந்தது. அத்துடன் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றம் வருவாள் ஆய்வாளரின் அறிக்கை இருந்தது.

5. மேற்கண்ட ஆவணங்களை எனது அலுவலத்திலிருந்து 13.08.2012 அன்று கடிதம் மூலம் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மேற்படி ஊழல் தடுப்பு அலுவலகத்திலிருந்து பட்டா வாரியான விபரங்கள் கோரியிருந்தார்கள்.

6. மித்ராவயல் கிராமத்தில் திரு.சண்முகசுந்தரம் என்பவரின் பெயரில் பட்டா எண்.296–இல் 3 ஏக்கர் 10 செண்ட் நஞ்சை, 12 ஏக்கர் 74 செண்ட் புஞ்சை நிலம் உள்ளது. பட்டா எண்.320–இல் சண்முகசுந்தரம் மனைவி பாக்கியலட்சுமி பெயரில் 33 செண்ட் நஞ்சை, 9.93 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. மேலும் அவரது பெயரில் பட்டா எண்.1030–இல் 7.51 ஏக்கர்

புஞ்சை நிலம் உள்ளது. பட்டா எண்.1047–இல் 17 செண்ட் நஞ்சை உள்ளது. பட்டா எண்.1052–இல் சண்முகசுந்தரம் மகன் பகீரதன் பெயரில் 25 செண்ட் நஞ்சை உள்ளது.

7. செங்காத்தங்குடி கிராமத்தில் திரு.சண்முகசுந்தரம் மனைவி பாக்கியலட்சுமி என்பவரின் பெயரில் பட்டா எண்.720–இல் 1 ஏக்கர் 51 செண்ட் நஞ்சை, 65 ஏக்கர் 63 செண்ட் புஞ்சை நிலம் உள்ளது. பட்டா எண்.727–இல் சண்முகசுந்தரம் மனைவி பாக்கியலட்சுமி பெயரில் 9 ஏக்கர் 21 செண்ட் நஞ்சை மற்றும் 5.87 ஏக்கர் புஞ்சையும் உள்ளது.

8. மேலும் லட்சுமி என்ற பெயரில் பட்டா எண்.1468–இல் 7.13 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. பட்டா எண்.1490–இல் சண்முகசுந்தரம் மகன் பார்த்திபன் பெயரில் 5 ஏக்கர் 37 செண்ட் புஞ்சை உள்ளது. பட்டா எண்.1551–இல் சண்முகசுந்தரம் மகன் பகீரதன் பெயரில் 7 ஏக்கர் 35 செண்ட் புஞ்சை நிலம் உள்ளது என்ற விபரங்களை எடுத்து சிவகங்கை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு அனுப்பி வைத்தேன்.

9. என்னிடம் காண்பிக்கப்படும் **13.08.2012–ம் தேதியிட்ட கடிதம் எண்.ஏ1/8720/2012 ஆவணங்களுடன் என்னால் அனுப்பிவைக்கப்பட்டது.** அதில் தான் சண்முகசுந்தரம், அவரது மனைவி,

மகள், மகன்கள் ஆகியோரின் பெயரிலுள்ள மித்ராவயல், செங்காத்தங்குடி கிராம பட்டா எண்கள் உள்ளிட்ட விபரங்கள் அடங்கியுள்ளது. **அந்த கடிதம் அ.த.சா.ஆ.1** ஆகும். 21.08.2012 கடித எண்,ஏ1/8720/2012 கடிதம் அடங்கிய அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகும். **பட்டா எண்.296 பசலி 1412 முதல் 1415 வரை மித்ராவயல் கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.3** ஆகும். **பட்டா எண்.320 பசலி 1407 முதல் 1415 வரை மித்ராவயல் கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.4** ஆகும். **பட்டா எண்.1030 பசலி 1407 முதல் 1415 வரை மித்ராவயல் கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.5** ஆகும். **பட்டா எண்.1047 பசலி 1411 முதல் 1415 வரை மித்ராவயல் கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.6** ஆகும். **பட்டா எண்.1052 பசலி 1412 முதல் 1415 வரை மித்ராவயல் கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.7** ஆகும்.

10. **பட்டா எண்.720 பசலி 1407 முதல் 1408 வரை செங்காத்தங்குடி கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.8** ஆகும். **பட்டா எண்.727 பசலி 1413 முதல் 1415 வரை செங்காத்தங்குடி கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.9** ஆகும். **பட்டா எண்.1468 பசலி 1413 முதல் 1415 வரை செங்காத்தங்குடி கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.10**

ஆகும். **பட்டா எண்.1490 பசலி 1413 முதல் 1415 வரை செங்காத்தங்குடி கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.11** ஆகும். **பட்டா எண்.1551 பசலி 1414 முதல் 1415 வரை செங்காத்தங்குடி கிராமத்தில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.12** ஆகும். **பட்டா எண்கள்,248, 557 மற்றும் 893 பசலி 1402 முதல் 1411 வரை மித்ராவயல் கிராமத்தில் சண்முகசுந்தரம் தகப்பனார் குப்புசாமி என்பவரின் பெயரில் அடங்கிய அடங்கல் அ.த.சா.ஆ.13** ஆகும். மேற்கண்ட ஆவணங்களை தான் சிவகங்கை ஊழல் தடுப்பு போலிசாருக்கு நான் அனுப்பினேன். இது தொடர்பாக ஊழல் தடுப்பு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை : வாய்ப்பளித்தும் இல்லை

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.20 15:10:41 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.